தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, மார்ச் 27, வெள்ளிக்கிழமை.

பங்குனி 13, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்".

சொல்லும்போது கேட்டவரைத் தன் வயப்படுத்தும் பண்பு களுடன், கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல்வன்மையாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

பல்லடம் தாலுகா தாசில்தார் அலுவலகம்.

197—(* வினா எண். 9420) **திரு. கு. ரமணி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தாலுகாவுக்கான தாசில்தார் அலுவலகத்தை திருப்பூர் மாநகரத்திலிருந்து பல்லடம் நகரத்துக்கு மாற்ற திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, பல்லடம் தாலுகா என்று பெயர் இருக்கிறது. ஆனால், அதனுடைய தலைமையிடம், தாசில்தார் மற்ற அரசு காரியாலயங்கள் இருப்பது திருப்பூரிலே. பல்லடம் தாலுகா என்ற பெயர் இருப்பதாலே, பல்லடத்திலே ரெவின்யூ இலாகாவினுடைய காரியாலயங்கள் வேறு ஏதாவது அமைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் இல்லை. பல்லடம் தாலுகா வெள்ளைக்காரன் காலத்தில் பிரிக்கப் பட்டது. அது பிரிக்கப்பட்ட காலத்தில் திருப்பூர் அவ்வளவு வளர்ச்சி பெற்றிருக்காது என்று நான் கருதுகிறேன். அதற்குப் பிறகு திருப்பூர் தொழில் துறையிலும், வணிகத் துறையிலும், மக்கள் தொகையிலும் வளர்ந்து வளர்ந்து, பெரிதாகிவிட்டதன் காரணமாக, அது பல்லடம் தாலுகாவின் தலைநகரமாகி விட்டதன் அடிப்படையில், அது அதனுடைய தலைநகர் என்று ஏற்படுத்தப் பட்ட பிறகு, வசதி வாய்ப்புகள் மற்றவை பல்வேறு கோணங் களில் பார்க்கப்படும்போது, பெயர் பல்லடம் தாலுகா என்று இருந்தாலும் தலைமையிடம் திருப்பூரிலே இருப்பதுதான் பல் வேறு வகையிலே பொருத்தமாக இருக்கும் என்று ஆராய்ந்த பிறகு முடிவெடுக்கப்பட்டது. ஆனால், பல்லடம் பகுதியினுடைய வளர்ச்சிக்கு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி நாம் தனியாகத் தான் ஆராய வேண்டும். அந்தப் பகுதியினுடைய வளர்ச்சிக்கு என்ன திட்டங்கள் தீட்ட வேண்டுமென்பதையும் நாம் ஆராய வேண்டும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, திருப்பூர் பின்னால் வளர்ச்சி அடைந்து தொழில் நகரமாகிவிட்டதனால், தாசில்தார் அலுவலகம் மற்ற பலவிதமான சர்க்கார் காரியாலயங்கள் அங்கே இருப்பது பொருத்தமானதுதான். பல்லடம் ஒரு பெரிய தாலுகாவாக இருக்கிறது. அதனால் அதை இரண்டாகப் பிரித்து, பல்லடம் தாலுகா என்றும், திருப்பூர் தாலுகா என்றும் ஏற்படுத்தினால், பல்லடத்திலே அரசாங்கக் காரியாலயங்கள் போன்றவை வருவதற்கும் வளர்ச்சி குன்றிப்போன அந்தப்

TRUTH ALONE TRIUMPHS

1987 மார்ச் 27]

பகுதியில் வளர்ச்சி ஏற்படவும் வழி ஏற்படும். அந்தச் செயற் குறிப்பு ஏதாவது அரசின் கவனத்தில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு கோரிக்கை அந்தப் பகுதி மக்களால் வைக்கப்பட்டிருக்கிறது. தலைநகரை மாற்றுகின்ற நிலை ஏற்படாவிட்டாலும்கூட, திருப்பூரை ஒரு வட்டமாகவும், பல்லடத்தை ஒரு பகுதியாகவும் ஆக்குகின்ற அளவுக்குப் பல்லடம் வட்டம் பெரிதாக இருக்கிற காரணத்தால் அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப் பட்டிருக்கிறது. வட்டமாக ஆக்குகின்ற அளவுக்கு சாத்தியக் கூறுகளும் அதனுடைய அடிப்படைத் தன்மைகளும் இருக்கின்றனவா என்பதை ஆராயுமாறு வருவாய்த் துறை கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுடைய முடிவைப் பொறுத்து நாம் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் பகுதியிலே இருக்கக்கூடியவர்களும் சூளூர் பகுதியிலே இருக்கக்கூடியவர்களும் பிரச்சினைகளை ஒட்டி திருப்பூர் நகரத்திற்குத்தான் வரவேண்டியிருக்கிறது. எனவே, அவர்களுக்கு வசதியான முறையிலே ஒரு குறைந்தபட்ச மாற்று ஏற்பாடு என்ற முறையில் பல்லடத்தில் ஒரு நிரந்தரமான அலுவலகத்தை, தாலுகா அலுவலகக் கடமைகளைச் செய்கின்ற முறையிலே நிறுவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய செயற்குறிப்பு இல்லை. எந்த வகையிலே அந்தப் பகுதியை மேம்பாடு அடையச் செய் வதற்கு முடியும் என்பதைப் பற்றி தனியாகத்தான் ஆராய வேண்டும்.

திரு. ஆர். செங்காளியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தாலுகாவானது நீண்ட நாட்களாக பல்லடம் தாலுகா என்று முன்னாலேயே, வெள்ளைக்காரன் காலத்திலேயே அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்று பல்லடம் சூளூருக்கும் திருப்பூருக்கும் மத்தியிலே இருக்கிறது. சூளூரானது கோவைக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ஒட்டிய பகுதியாக இருக்கிறது. திருப்பூரை ஒட்டியதாக இருக்கிறது. பல்லடம் என்பது மத்தியிலே உள்ள ஏரியா. அது பின்தங்கிய பகுதியாகவும் இருக்கிறது. இப்போது அங்கே சில மாஜிஸ்திரேட் கோர்ட்களும் இருக்கின்றன. ஆகவே தாசில்தார் அலுவலகம் அங்கே ஏற்படுமானால் அந்த ஏரியா அபிவிருத்தி பெறுவதற்கும் தொழில்கள் வளருவதற்கும் வசதியாக இருக்கும் என்பதை உணர்ந்து அதைப்பற்றிய முடிவை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு வட்டத்தை உருவாக்குகின்ற அத்தகைய சூழ்நிலை ஏற்படுகிறபோது அந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பதிலே பல்வேறு இடர்ப்பாடுகள் மற்றவைகள் இருக்கின்றன. ஏற்கெனவே ஒரு தாலுகா அலுவலகம் அமைந்து பல ஆண்டுகளாக செயல்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே வளர்ந்து வருகிற ஒரு இடத்தில் இருப்பதை எடுத்து பல்லடத்திற்கு மாற்றுவது என்பது கடினமான செயலாக அமையும். அதுமட்டுமல்லாமல் அதன் மூலம் ஏற்படுகிற பலன்களையும் மற்றவைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் அது இயலாததாக அமையும். மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய வினாவிற்கிணங்க பல்லடம் தனியாகவும், திருப்பூர் தனியாகவும் இரண்டாக ஏற்படுகிற சூழ்நிலை வருகிறபோது பல்லடம் தனி வட்டமாகவோ அல்லது அதோடு வேறு சில பகுதிகளைச் சேர்த்து அது ஒரு தனி வட்டமாகவோ ஆகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று பல்லடத்தைத் தலைநகரமாகக் கொண்டு அங்கே அலுவலகம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்படக்கூடும். இப்படி மாநிலத்திலே பல இடங்கள் இருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்திலே குளத்தூர் வட்டம் என்று இருக்கிறது. ஆனால் அதற்குத் தலைநகர் கீரனூரிலேதான் இருக்கிறது. அதைப்போலவே உடையார் பாளையம் என்ற வட்டம் இருக்கிறது. அதற்குத் தலைநகர் ஜெயங்கொண்டானிலே இருக்கிறது. நான் முதலிலே சொன்னபடி மக்களுடைய நலன்கள், வசதிகள், நிர்வாக வசதிகள் ஆகியவற்றைக் கருத்தில் வைத்து நாம் பணிகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1987 மார்ச் 27]

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலே உள்ள பெரிய தாலுகாக்களை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் அரசின் ஆய்வில் உள்ளதா? அதேபோல் சைதை தாலுகா மிகப் பெரிய தாலுகாவாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பெரிய தாலுகாக்களை இரண்டாகப் பிரிக்கின்ற குறிப்புகள் எதுவும் இல்லை. குறிப்பாக சில தாலுகாக்களை அவை பெரிதாக இருக்கின்ற தன்மையைக் கருதி, நிர்வாக வசதியைக் கருதி அவ்வப்போது பிரித்துக் கொண்டு வருகிறோம். அந்த வகையில் அண்மையில் 25, 30 தாலுகாக்கள் உருப்பெற்று எழுந்திருக்கின்றன.

வன, மீனளத் துறையை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

198—(* வினா எண். 10584) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தலைமைச் செயலகத்தில் வன, மீனளத் துறையை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் வனம் மற்றும் மீன் துறையை இரண்டாகப் பிரிப்பது பற்றிய பலாபலன்கள் அரசால் ஆராயப்பட்டு வருகின்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

292—(* வினா எண். 12476) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?